11'c'19

# முதல் திருப்புதல் தேர்வு - 2025

XI - ஆம் வகுப்பு

## கணக்குப்பதிவியல்

காலம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 90

### பகுதி - I

I **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

**சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக :-** 20 X 1 = 20

1. ஒரு வணிகத்தின் நிதிநிலையை அறிந்து கொள்ள அடிப்படையானது

அ) குறிப்பேடு ஆ) இருப்பாய்வு இ) இருப்பு நிலைக்குறிப்பு ஈ) பேரேடு

2. ........ கருத்து நிலைத் தன்மை மரபு மற்றும் நிகழ்வு தீர்வுக் கருத்து ஆகியவை கணக்கியலின் அடிப்படை அனுமானங்களாகக் கருதப்படுகிறது.

அ) வணிகத் தனித்தன்மை ஆ) பொருத் துகை

இ) நிறுவனத் தொடர்ச்சி ஈ) தீர்வு

3. இந்தியாவில் கணக்கியல் தரநிலைகளை வழங்கும் அமைப்பு

அ) இந்திய மைய வங்கி

ஆ) இந்திய அடக்கவிலை மற்றும் கணக்காளர் நிறுவனம்

இ) உச்சநீதிமன்றம்

ஈ) இந்தியப் பட்டயக் கணக்காளர் நிறுவனம்

4. ஒரு நிறுவனத்தின் சொத்துக்கள் மதிப்பு ரூ. 20,0000மற்றும் அதன் வெளியாட்களுடனான பொறுப்புகள் ரூ. 120000 எனில், அந்நிறுவனத்தில் முதல்

அ) 320000 ஆ) 120000 இ) 200000 ஈ) 80000

5. முன்கூட்டிச் செலுத்திய வாடகை ஒரு

அ) பெயரளவு க/கு ஆ) ஆள்சார் க/கு

இ) சொத்துக் க/கு ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் க/கு

6. ஒரு கணக்கின் வரவு மொத்தத்தை விட பற்று மொத்தத்தை விட பற்று மொத்தம் அதிகமாக இருப்பின் அதன் பொருள்

அ) வரவு இருப்பு ஆ) பற்று இருப்பு

இ) இருப்பு இன்மை ஈ) பற்றும் மற்றும் வரவு இருப்பு

7. இருப்பாய்வு கீழ்க்கண்ட எந்த கணக்குகளை உள்ளடக்கி இருக்கும்?

அ) ஆள்சார் க/கு ஆ) சொத்துக் க/கு இ) பெயரளவு க/கு ஈ) அனைத்து க/கு களும்

8. கீழ்க்கண்ட கணக்குகளில் எந்தக் கணக்கின் இருப்பு இருப்பாய்வில் பற்றுப்பத்தியில் தோன்றும்

அ) பற்பல கடனீந்தோர் க/கு ஆ) முதல் க/கு

இ) எடுப்புகள் க/கு ஈ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு க/கு



www.Padasalai.Net

Scanned with OKEN Scanner

9. விற்பனை ஏடு எதைப் பதிவு செய்ய உதவுகிறது?

அ) அனைத்து சரக்குகளின் விற்பனை

ஆ) அனைத்து சொத்துக்களின் கடன் விற்பனை

இ) அனைத்து சரக்குகளின் கடன் விற்பனை

ஈ) அனைத்து சொத்துக்கள் மற்றும் சரக்குகள் விற்பனை

10. நிலைச் சொத்துக்கள் கடனுக்கு வாங்கிய பதிவு செய்ய வேண்டிய ஏடு

அ) கொள்முதல் ஏடு ஆ) விற்பனை ஏடு

இ) கொள்முதல் திருப்ப ஏடு ஈ) உரிய குறிப்பேடு

11. சில்லறை ரொக்க ஏட்டின் இருப்பு

அ) ஒரு செலவு ஆ) ஒரு இலாபம் இ) ஒரு சொத்து ஈ) ஒரு பொறுப்பு

12. ஒரு நடவடிக்கையின் பற்று மற்றும் வரவுத் தன்மைகளை ரொக்க ஏட்டில் பதிந்தால் அது

அ) எதிர்ப் பதிவு ஆ) கூட்டுப் பதிவு இ) ஒற்றைப் பதிவு ஈ) சாதாரணப் பதிவு

13. வங்கி அறிக்கையின் படி இருப்பு ரூ. 1000 செலுத்திய காசோலை வங்கியால் இன்னும் வரவு வைக்கப்படாதது ரூ. 2000, ரொக்க ஏட்டில் வங்கிப்பத்தியின் இருப்பு எவ்வளவு?

அ) ரூ. 3000 மேல் வரைப்பற்று ஆ) ரூ. 1000 மேல் வரைப்பற்று

இ) ரூ. 3000 சாதகமான இருப்பு ஈ) ரூ. 1000 சாதகமான இருப்பு

14. ரொக்க ஏட்டின் வங்கிப்பத்தியின் பற்றிருப்பு என்பது.

அ) வங்கி அறிக்கையின் படி வரவிருப்பு

ஆ) வங்கி அறிக்கையின் படி பற்றிருப்பு

இ) ரொக்க ஏட்டின் படி மேல் வரைப்பற்று

ஈ) மேல்கூறிய ஏதுமில்லை

15. இயந்திரம் நிறுவுவதற்கு செலுத்தப்பட்ட கூலியை கூலிக் கணக்கில் பற்று வைப்பது

அ) பகுதி விடுபிழை ஆ) விதிப்பிழை இ) முழு விடுபிழை ஈ) இருமுறை பதிந்த பிழை

16. தேய்மானம் எதனால் ஏற்படுகிறது.

அ) காலப்போக்கு ஆ) பயன்பாடு இ) வழக்கொழிவு ஈ) அ, ஆ மற்றும் இ

17. நடைமுறை முதலை அதிகரிப்பதற்காக இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடம் பெற்ற நடுத்தர காலக்கடன் தொகை

அ) முதலினச் செலவுகள் ஆ) வருவாயினச் செலவுகள்

இ) வருவாயின வரவுகள் ஈ) முதலியன வரவுகள்

18. பின்வருவனவற்றில் எது நடப்புச் சொத்துகளில் சேராதது?

அ) ரொக்கம் ஆ) சரக்கிருப்பு

இ) அறைகலன் ஈ) முன்கூட்டிச் செலுத்திய செலவு

www.Padasalai.Net



Scanned with OKEN Scanner

19. நிகர இலாபம்

அ) முதல் கணக்கில் பற்றி வைக்கப்படும் ஆ) முதல் கணக்கில் வரவு வைக்கப்படும்

இ) எடுப்புகள் கணக்கில் பற்று வைக்கப்படும் ஈ) எடுப்புகள் கணக்கில் வரவு வைக்கப்படும்

20. பின்வருவனவற்றில் எந்த ஒன்று கணக்குகளை குறிமுறையாக்கம் செய்யும் முறைகளில் இல்லாதது?

அ) அணுக்குறிமுறை ஆ) தொடர்ச்சியான குறிமுறை

இ) தொகுப்புக் குறிமுறை ஈ) மிதியோட்டுக் குறிமுறை

## பகுதி - II

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

**வினா எண். 30 கட்டாயம் விடையளிக்கவும் :-** 7 X 2 = 14

21. கணக்கேடுகள் பராமரிப்பை வரையறு.

22. இரட்டைப் பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.

23. 2023 ஜனவரி 1 அன்று வினோத் என்பவரின் ஏடுகளில் கீழ்க்கண்ட இருப்புகள் காணப்பட்டன இருப்புகள் காணப்பட்டன.

சொத்துகள் : ரொக்கம் ரூ. 50,000

சரக்கிருப்பு ரூ. 60,000, கடனாளிகள் ரூ. 30,000 இயந்திரம் ரூ. 50,000 பொறுப்புகள் கடனீந்தோர் ரூ. 20,000 தொடக்கப் பதிவினைத் தருக.

24. மாற்றுச்சீட்டின் வரைவிலக்கணம் தருக.

25. சாதாரண ரொக்க ஏடு என்றால் என்ன?

26. பின்வரும் விவரங்களிலிருந்து ராஜ் என்பவரின் 2023 டிசம்பர் 31-ம் நாளுக்குரிய வங்கிச் சரிகட்டு பட்டியலை தயார் செய்க.

அ) ரொக்க ஏட்டின் படி இருப்பு ரூ. 7130

ஆ) செலுத்திய காசோலை வசூலாகாதது ரூ. 1000

இ) வாடிக்கையாளர் நேரடியாக வங்கியில் செலுத்தியது ரூ. 800/-

27. பின்வரும் பிழைகளின் ஒவ்வொன்றிலும் பாதிக்கும் கணக்கு / கணக்குகளைக் கூறவும்

அ) கடனுக்கு சரண்யாவிடமிருந்து ரூ. 150க்கு சரக்கு வாங்கியது அவரது கணக்கில் பற்றுப்பக்கம் எடுத்தெழுதப்பட்டுள்ளது.

ஆ) விற்பனை ஏட்டின் மொத்தம் ரூ. 4,500 இருமுறை பேரேட்டில் எடுத்து எழுதப்படும்.

28. ஒரு நிறுவனம் 1.1.2017 அன்று ரூ. 1,00,000 மதிப்புள்ள இயந்திரம் ஒன்றை வாங்கியது இயந்திரத்தின் எதிர்நோக்கும் பயனளிப்புக் காலம் 10 ஆண்டுகள் மற்றும் அதன் இறுதி மதிப்பு ரூ. 10,000 ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் அதன் தேய்மானத் தொகையை நேர்க்கோட்டு முறையில் கணக்கிடவும்.

29. மறைமுகச் செலவுகளை ஏதேனும் 4 உதாரணம் தருக.



www.Padasalai.Net

Scanned with OKEN Scanner

30. கீழ்க்காணும் சூழ்நிலைகளில் மாற்றுச்சீட்டின் முதிர்வுநாள் கணக்கிடுக.

| *மாற்றுச்சீட்டின் நாள்* | *தவணைக் காலம்* |
|---|---|
| மார்ச் 1 | 2 மாதங்கள் |
| ஜூலை 12 | 1 மாதம் |
| அக்டோபர் 1 | 30 நாட்கள் |

## பகுதி - III

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி.**

**வினா எண் 40 கட்டாய வினா :-** 7 X 3 = 21

31. கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக.

| *சொத்துகள்* | = | *முதல்* | + | *பொறுப்புகள்* |
|---|---|---|---|---|
| அ) 200000 | = | 80000 | + | ? |
| ஆ) 100000 | = | ? | + | 40000 |
| இ) ? | = | 260000 | + | 80000 |

32. பின்வரும் விவரங்களிலிருந்து ஆனந்த் என்பவரின் கணக்கைத் தயாரிக்கவும்.

| 2017 ஜூலை | | ரூ. |
|---|---|---|
| 1 | ஆனந்த் கணக்கில் வரவு இருப்பு | 4,000 |
| 15 | ஆனந்துக்கு ரொக்கம் செலுத்தியது | 2,000 |
| 18 | ஆனந்திடமிருந்து கடனாகக் கொள்முதல் செய்தது | 8000 |
| 20 | ஆனந்துக்கு ரொக்கம் செலுத்தியது | 3960 |
| | அவர் அளித்த தள்ளுபடி | 40 |
| 25 | ஆனந்திடமிருந்து கடனுக்கு கொள்முதல் செய்தது | 5000 |

33. பின்வரும் நடவடிக்கைகளை எழுதுபொருள் வியாபாரம் செய்யும் இராம் நிறுவனத்தின் விற்பனை ஏட்டில் பதிவு செய்க.

**2017 ஜனவரி**

| | |
|---|---|
| 2 | அன்புவிற்கு கடனுக்கு விற்றது ரீம் ஒன்று ரூ. 150 வீதம் 20 ரீம்கள்<br>ஜெகதீஷ் நிறுவனத்திற்கு ஒரு டஜன் ரூ. 360 வீதம் 6 டஜன்கள் எழுதுகோல் கடனுக்கு விற்றது. |
| 10 | பழைய செய்தித்தாளை ரொக்கத்திற்கு விற்றது ரூ. 620 |
| 15 | இளங்கோவிற்கு கடனுக்கு விற்றது ஒன்று ரூ. 170 வீதம் 10 ஒலிய அட்டைகள். |
| 20 | கனி விற்பனையாகத்திற்கு ஒன்று ரூ. 1520 வீதம் 4 எழுது மேசைகளை ரொக்கத்திற்கு விற்றது. |

34. வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிப்பதற்கான மூன்று காரணங்களைத் தருக.

35. இருப்பாய்வு தயாரிக்கப்பட வேண்டி உள்ளது. எனக் கருதி கீழ்க்கண்ட பிழைகளைத் திருத்தம் செய்யவும்.

அ) விற்பனை ஏட்டில் ரூ. 400 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.

ஆ) விற்பனைத் திருப்ப ஏட்டில் ரூ. 500 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.

இ) கொள்முதல் திருப்ப ஏட்டில் ரூ. 600 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.

ஈ) கொள்முதல் திருப்ப ஏட்டில் ரூ. 700 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.

உ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு ஏட்டில் ரூ. 800 குறைவாக கூட்டப்பட்டுள்ளது.

ஊ) சம்பளக் கணக்கின் கூட்டுத்தொகை ரூ. 1200, கூடுதலாக எடுத்து எழுதப்பட்டுள்ளது.



www.Padasalai.Net

Scanned with OKEN Scanner

36. தேய்மானம் நீக்க வேண்டியதன் நோக்கங்கள் யாவை?

37. முதலின வரவு மற்றும் வருவாயின வரவு வேறுபடுத்தவும்.

38. பல்வேறு வகையான கணக்கியல் மென்பொருள் யாவை?

39. கீழ்க்காணும் விவரங்களிலிருந்து 31 மார்ச் 2018 ஆம் ஆண்டிற்கான வியாபாரக் கணக்கினை தயாரிக்கவும்.

| | |
|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 2500 |
| கொள்முதல் | 27000 |
| விற்பனை | 40000 |
| கூலி | 2500 |
| வெளித்திருப்பம் | 5200 |
| உள் திருப்பம் | 7000 |
| நிலக்கரி மற்றும் எரிவாயு | 3300 |
| உள்தூக்குக் கூலி | 2600 |
| இறுதிச் சரக்கிருப்பு | 5200 |

40. முதல் மீது வட்டி மற்றும் எடுப்புகள் மீது வட்டி குறித்து சரிக்கட்டுப் பதிவுகள் தருக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் :-** 7 X 5 = 35

41. அ) ஜெயசீலி என்னும் தனி வணிகர் ஒரு பலசரக்கு கடையினை நடத்தி வருகிறார் 2018 ஜனவரியில் அக்கடையின் நடவடிக்கைகள் பின்வருமாறு இருந்தன அவைகளைக் குறிப்பேட்டில் பதிவு செய்க.

**ஜனவரி**

| | | |
|---|---|---|
| | ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ரூ. | 80,000 |
| | வங்கியில் செலுத்திய ரொக்கம் ரூ. | 40,000 |
| | ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது ரூ. | 5000 |
| | லிப்டன் நிறுவனத்திடமிருந்து சரக்குகளை கடனுக்கு கொள்முதல் செய்தது | 10000 |
| 5. | ஜாய் என்பவரிடம் ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 11000 |
| 6. | சம்பளத்தை ரொக்கமாக வழங்கியது | 5000 |
| 7. | லிப்டன் நிறுவனத்திடம் ஜனவரி 4 அன்று கொள்முதல் செய்ததற்கான தொகை காசோலை மூலம் செலுத்தப்பட்டது. | |
| 9. | ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது | 4000 |

*(அல்லது)*

ஆ) பின்வரும் விவரங்களிலிருந்து டிசம்பர் 31, 2017 நாளுக்குரிய ரொக்க ஏட்டின் படியான இருப்பைக் கண்டறிக.

| | விவரம் | ரூ. |
|---|---|---|
| 1. | வங்கி அறிக்கையின்படி மேல்வரைப்பற்று | 6500 |
| 2. | வங்கியில் செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படவில்லை | 10500 |
| 3. | விடுத்த காசோலை இன்னும் செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படாதது | 3000 |



www.Padasalai.Net

Scanned with OKEN Scanner

| | | |
|---|---|---|
| 4. | வங்கியால் தவறுதலாக பற்று வைக்கப்பட்டது | 500 |
| 5. | வங்கியால் பற்று வைக்கப்பட வங்கிக்கட்டணம் மாற்று வட்டி | 150 |
| 6. | சரக்குகள் மீதான காப்பீட்டு முனைமம் நிலை அறிவுறுத்தலின்படி வங்கியால் நேரடியாகச் செலுத்தப்பட்டது | 100 |

42. அ) ராஜேஷ் என்பவரது ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்க்காணும் இருப்புகளைக் கொண்டு 31.03.2017 ஆம் நாளுக்குரிய இருப்பாய்வைத் தயாரிக்கவும்.

| | |
|---|---|
| பெறுவதற்குரிய மாற்றுச்சீட்டு | 13000 |
| வங்கிக் கட்டணம் | 750 |
| பயணச் செலவுகள் | 350 |
| பெற்றத் தள்ளுபடி | 1300 |
| கையிருப்பு ரொக்கம் | 1000 |
| எடுப்புகள் | 7000 |
| பற்பல கடனாளிகள் | 17100 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 12000 |
| முதல் | 25000 |

***(அல்லது)***

ஆ) 01.01.2010 அன்று ரூ. 5000க்கு சொத்து ஒன்று வாங்கப்பட்டது ஆண்டுதோறும் நேர்கோட்டு முறையில் தேய்மானம் நீக்கப்பட வேண்டும். அச்சொத்தின் எதிர்நோக்கும் பயனளிப்பு காலம் 10 ஆண்டுகள் மற்றும் அதன் மதிப்பு ரூ. 10000 கணக்குகள் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 31ல் முடிக்கப் பெறுகின்றன. தேய்மான விகிதம் கணக்கிட்டு, இரண்டு ஆண்டுகளுக்கு குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும்.

43. அ) பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு நிரஞ்சன் அவர்களின் 2017 பிப்ரவரி மாதத்திற்கான துணை ஏடுகளை தயார் செய்யவும்.

**2017 பிப்ரவரி**

| | | |
|---|---|---|
| 1. | முகில் நிறுவனத்திடம் கடனுக்கு சரக்கு வாங்கியது | 12480 |
| 4 | சச்சின் நிறுவனத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது | 15000 |
| 6 | மனிஷ் நிறுவனத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது | 12100 |
| 7 | சச்சின் நிறுவனம் திருப்பிய சரக்கு : அதற்கு பணம் செலுத்தப்படவில்லை | 1200 |
| 9 | முகில் நிறுவனத்திற்கு சரக்கு திருப்பி அனுப்பியது பணம் பெறப்படவில்லை | 1500 |
| 10 | மனிஷ் நிறுவனத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது | 13300 |
| 14 | முகில் நிறுவனத்திடம் சரக்கு கடனுக்கு வாங்கியது | 15200 |

***(அல்லது)***



www.Padasalai.Net

Scanned with OKEN Scanner

ஆ) கீழ்க்காணும் தகவல்களிலிருந்து ராமசுந்திரி என்பவரின் ஏடுகளில் 2017, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபார இலாப நட்டக் கணக்கையும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயாரிக்கவும்.

| ***விவரம்*** | ***ரூ.*** | ***விவரம்*** | ***ரூ.*** |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 2500 | விற்பனை | 7000 |
| கூலி | 2700 | கொள்முதல் | 3300 |
| இறுதிச் சரக்கிருப்பு | 4000 | சம்பளம் | 2600 |
| பெற்ற தள்ளுபடி | 2500 | முதல் | 52000 |
| இயந்திரம் | 52000 | வங்கி ரொக்கம் | 6400 |
| கடனீந்தோர் | 8000 | | |

44. அ) பின்வரும் நடவடிக்கைகளை நேரடியாகப் பேரேட்டில் எடுத்து எழுதவும் :

**2017 ஜூன்**

| | | |
|---|---|---|
| 1 | ராஜா ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ரூ. | 50,000 |
| 6 | ரொக்கத்திற்கு சரக்கு விற்றது ரூ. | 8000 |
| 8 | தேவி என்பவருக்கு கடனுக்கு சரக்கு விற்றது | 9000 |
| 15 | ரொக்கம் கொடுத்து சரக்கு வாங்கியது | 4000 |
| 20 | சாந்தி என்பவரிடம் கடனாக சரக்கு வாங்கியது | 5000 |

***(அல்லது)***

ஆ) கணினி அமைப்பின் உள்ளீட்டு மற்றும் வெளியீட்டு சாதனங்களைக் குறிப்பிடுக.

45. அ) 2018 மார்ச் 31 ஆம் நாளுக்குரிய வங்கிச் சரிக்கட்டும் பட்டியலைத் தயார் செய்தது ரொக்க ஏட்டின் படியான இருப்பினைக் கண்டறிக.

| | ***விவரம்*** | ***ரூ.*** |
|---|---|---|
| 1. | வங்கி அறிக்கையின் படியான வங்கி இருப்பு | 15000 |
| 2. | விடுத்த காசோலை இன்னும் செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படாதது | 2500 |
| 3. | வங்கிக் கட்டணம் ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை | 250 |
| 4. | வங்கியால் பற்று செய்யப்பட்ட வட்டி ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை | 500 |
| 5. | நிலை அறிவுறுத்தலின் படி வங்கி செலுத்திய காப்பீட்டு முனைமம் ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை | 300 |
| 6. | செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படாதது | 900 |

***(அல்லது)***



www.Padasalai.Net

Scanned with OKEN Scanner

ஆ) ஒரு கணக்காளர் கீழ்க்காணும் பிழைகளை இருப்பாய்வு தயாரித்த பின் கண்டறிந்தார் அனாமத்துக் கணக்கு உள்ளது எனக் கருதி அப்பிழைகளைத் திருத்தம் செய்யவும்.

அ) இயந்திரம் ரூ. 3500 க்கு வாங்கியது கொள்முதல் கணக்கில் பற்றி வைக்கப்பட்டுள்ளது.

ஆ) ரெய்னாவுக்கு ரூ. 1800 சம்பளம் செலுத்தியது அவர் கணக்கில் பற்று வைக்கப்பட்டது.

இ) வட்டி பெற்றது ரூ. 200 தரகுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

ஈ) அமுத நிலாவிடமிருந்து கடனுக்கு ரூ. 1800க்கு சரக்கு வாங்கியது கணக்கு ஏடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

உ) பயன்படுத்தப்பட்ட அறைகலன் ரூ. 350க்கு விற்றது விற்பனைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

46. அ) பின்வரும் தகவல்களிலிருந்து முன்பண மீட்பு முறையில் பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏட்டைத் தயாரிக்கவும்.

2017 ஜனவரி

| | | |
|---|---|---|
| 1 | சில்லறைச் செலவுகளுக்காக ரொக்கம் பெற்றது | 500 |
| 2 | பயணச்செலவுக்கு கொடுத்தது | 5 |
| 3 | வண்டிக் கட்டணம் கொடுத்தது | 12 |
| 4 | தபால்செலவு செய்தது | 15 |
| 5 | தற்காலிக வேலையாட்களுக்கு கூலி கொடுத்தது | 66 |
| 6 | எழுதுபொருள் வாங்கியது | 134 |
| 7 | போக்குவரத்துச் செலவு செய்தது | 18 |
| 8 | பழுதுபார்ப்புச் செலவு செய்தது | 65 |
| 9 | பேருந்துக் கட்டணம் செலுத்தியது | 11 |
| 10. | வண்டிக்கட்டணம் கொடுத்தது | 24 |

*(அல்லது)*

ஆ) ஒரு பக்கப் பிழைகள் மற்றும் இருபக்கப் பிழைகள் பற்றிய குறிப்பு எழுதவும்.

47. அ) கீழ்க்கண்டவற்றை முதலினம் அல்லது வருவாயினம் என வகைப்படுத்தவும்.

1. தணிக்கைக் கட்டணம் செலுத்தியது ரூ. 10,000
2. தொழிலாளர் நலனுக்காகச் செய்த செலவு ரூ. 5000
3. நிறுவன வாகனத்தின் மீதான பராமரிப்புச் செலவு ரூ. 200
4. பழைய இயந்திரம் வாங்கி பழுது பார்த்தச் செலவு ரூ. 3000
5. ஆலை வாடகைச் செலுத்தியது ரூ. 12,000 *(அல்லது)*

ஆ) ரொக்கத் தள்ளுபடிக்கும் வியாபாரத் தள்ளுபடிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.



www.Padasalai.Net
Scanned with OKEN Scanner